A/L Day Class
இப்பொழுது நடைபெறுகின்றன
8-15 — Physics
9-15 — Chemistry
10-30 — Zoology
10-30 — App Maths
11-30 — Botany
11-30 — Pure Maths
Bond INSTITUTION
58 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ. 1/50

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

A/L DAY CLASS
(வார நாட்களில்)
Physics -
Mr நந்தகுமார் B. Sc.
Chemistry -
Mr. Bar B. Sc.
Zoology -
Mr. ஈசன் B. Sc.
Botany -
Mr. கதிர்காமநாதன் B.Sc.
Pure Maths.- App Maths
Mr. சந்திரமோகன் B.Sc.
Bond INSTITUTION

கடர்:- 2 யாழ்ப்பாணம் அக்ஷய ஸூ மார்கழி மீ 06 உ ஞாயிற்றுக்கிழமை ஹிஜ்ரி 1407 ரபியு ஆகிர் பிறை 18 (21-12-1986) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 21

## தமிழர் அமைப்புகளுடன் பேச
# கிழக்கு முஸ்லிம் எம்.பிக்கள் சென்னைக்கு விரைவர்



வெள்ளியன்றுகாலையில் கைதிகள் பரிமாற்றத்தின் போது விடுவிக்கப்பட்ட விடுதலைப் புலிகளின் இயக்கப் போராளி செல்லகுமார் புலிகள் இயக்கத் தளபதி கிட்டுவுடனும் தந்தையுடனும் சகோதரியுடனும் காணப்படுகிறார்.
(விவரணக் கட்டுரை 3ஆம் பக்கத்தில்) (உ)

## தமது சுயநிர்ணய உரிமைக்கு உத்தரவாதம் கேட்பார்கள்

— மட்டக்களப்பு மாவட்டச் செய்தியாளர் ...

மட்டக்களப்பு, டிச. 21

ஆளுங்கட்சியைச் சேர்ந்த கிழக்கு மாகாண முஸ்லிம் எம். பிக்கள் கூட்டாக சென்னை சென்று தமிழர் அமைப்புக்களைச் சந்தித்துப் பேசவிருக்கின்றனர்.

இச் சந்திப்பை ஒழுங்கு செய்து கொடுக்க இந்திய இணை அமைச்சர்கள் குழு முன்வந்துள்ளது.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு தமிழர் அமைப்புக்களை நேரில் சந்தித்துப் பேசி, ஒரு தீர்மானத்துக்கு வர வாய்ப்பு ஒன்றை ஏற்படுத்தித் தரும்படி முஸ்லிம் எம். பிக்கள் குழு, இணை அமைச்சர்களைச் சந்தித்தபோது விண்ணப்பித்துக் கொண்டது.

### தமிழருடன் இணைந்து வாழ விருப்பம்

கிழக்கு மாகாணத்தை இன ரீதியாக மூன்று மாகாண சபைகளாகப் பிரிப்பதை எதிர்ப்பதாகவும் --

சிங்களப் பகுதிகளைத் தவிர்த்துவிட்டு ஏனைய பகுதிகள் தமிழ் பேசும் மாகாணசபையாக அமையவேண்டும் எனவும் --

கிழக்கில் தமிழருடன் இணைந்தே முஸ்லிம்கள் வாழ விரும்புவதாகவும்—

முஸ்லிம்கள் குழு அச் சந்திப்பின் போது இந்திய அமைச்சர்களிடம் தெரிவித்துக்கொண்டது.

தமிழ் மொழி மாகாணத்தில் முஸ்லிம்களுக்கு சுய நிர்ணய உரிமை வழங்கப்படும் என்று கூட்டணி தெரிவித்தாலும்,

தமிழர் அமைப்புக்கள் இது சம்பந்தமான உத்தரவாதத்தைப் பகிரங்கமாக நேரில் முஸ்லிம் பிரதிநிதிகளிடம் தெரிவிக்கவில்லை என்றும் முஸ்லிம் குழு இந்தியக் குழுவிடம் மேலும் தெரிவித்தது.

இவை குறித்து தமிழர் அமைப்புக்களுடன் நேரில் பேசி உடன்பாடு ஒன்றுக்கு வர வாய்ப்பு ஒன்றை ஏற்படுத்தித் தரும்படி முஸ்லிம் குழு விடுத்த வேண்டுகோளை இந்தியக் குழு ஏற்றது.

புதுடில்லி திரும்பிய பின்னர் இது சம்பந்தமாக சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்பு கொண்டு ஒழுங்கு செய்வதாக உறுதியளித்தனர்.

பொத்துவில் முதலாவது எம். பி ஜனாப் உதுமா லெப்பை, மட்டக்களப்பு இரண்டாவது எம். பி. றிஸ்வி சின்ன லெப்பை, சம்மாந்துறை எம். பி. அப்துல் மஜீத், மூதூர் எம். பி. ஜனாப் மஹ்ரூப், கல்முனை எம் பி ஏ. ஆர். மன்சூர் ஆகியோரடங்கிய குழு விரைவில் சென்னை செல்லும்.

(அ-ஐ-எ-21)

### சந்திக்க மறுப்பு

கொழும்பு, டிச. 21

மாகாணசபைத் திட்டத்தை எதிர்க்கும் தீவிர சிங்கள இயக்கத் தலைவர்களில் ஒருவரான டாக்டர் காமினி ஈரியகொல்லை தலைமையிலான தூதுக்குழுவைச் சந்திக்க இந்திய இணை அமைச்சர் குழு மறுத்துவிட்டது.

(உ-ஐ-எ)

முச்சந்தி முனி



என்ன, அமெரிக்காக்காரர் இனப் பிரச்சினையைத்தீர்க்க உதவப் போறாராமோ. சோழியன்குடுமிசும்மா ஆடாது தம்பி...!

## காசோலைகளை ஏற்க மறுப்பு

யாழ்ப்பாணம் டிச.21

மக்கள் வங்கிக் காசோலைகளை கடைக்காரர்கள் ஏற்க மறுக்கிறார்கள்.

அடகு வைத்தோர் சங்கத்தின் மறியல் போராட்டம் காரணமாக மக்கள் வங்கி இயங்க முடியாத நிலையில் இருக்கிறது.

இதன் காரணமாகவே கடைக்காரர்கள், ஏஜென்ஸிகள் நிதிநிறுவனங்கள் மக்கள் வங்கிக் காசோலைகளை ஏற்க மறுப்புத்தெரிவித்து வருகின்றனர். (உ-10)

# முஸ்லிம் எம். பி. பதவிவிலகுவார்?

கொழும்பு டிச 21

கிழக்கு இலங்கையில் உள்ள ஐ. தே. க. வின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் பதவி துறந்து ஸ்ரீலங்காமுஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைமைப் பதவியை ஏற்கலாம்.

இப்படி கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பலத்த பேச்சடிபடுகிறது.

அண்மைக் காலமாக கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்கள் மீது நடத்திய ஆயுதபடையினர் தாக்குதல் சம்பவங்கள் முஸ்லிம் அரசியல்வாதிகள் மத்தியில் பெரும் கசப்புணர்வை ஏற்படுத்தியுள்ளதாம்.

இந்த வகையில் அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம் விகிதாசாரம் குறைந்து வருவது, அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த முஸ்லிம் எம்பிக்களின் கடிதங்கள், சிபார்சுகள் மேலிடத்தில் புறக்கணிக்கப்படுவது

(4ஆம் பக்கம் பார்க்க)

## வல்வெட்டித் துறையில் 3 சிப்பாய்கள் பலி!

வல்வெட்டித்துறை, டிச 21

வல்வெட்டித்துறை இராணுவ முகாம் பகுதியில் கடந்த வெள்ளி இரவு 8 மணியளவில் புலிகளுக்கும் சிப்பாய்களுக்கும் இடையில் நிகழ்ந்த மோதலில் மூன்று சிப்பாய்கள் கொல்லப்பட்டதாகவும், சிலர் காயமடைந்ததாகவும் புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

முகாமை அண்டிய

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண அமெரிக்க எம். பி உதவ முன்வருகிறார்

கொழும்பு, டிச. 21

இலங்கை இனப்பிரச்சினைப் பேச்சுக்களை வெற்றிகரமாக முடிக்க அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர் ஸ்டீபன் சோலார்ஸ் உதவ முன்வந்திருக்கிறார்.

இது சம்பந்தமாக மீண்டும் புதுடில்லிக்கு அவர் செல்ல இருக்கிறார்.

இனப்பிரச்சினை சம்பந்தமாக ஜனாதிபதி முதல் அன்கிரிய பீடாதிபதி வரை எல்லோரையும் திரு. சோலார்ஸ் சந்தித்துப் பேசினார்.

தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரமுகர் டாக்டர் நீலன் திருச்செல்வத்தை திரு. சோலார்ஸ் சந்தித்து, தீர்வுக்குத் தடையாக இருப்பது என்ன என்று வினவினார்.

அதிகாரப் பகிர்வு எந்த மட்டத்தில் என்பது தான் தீர்வு காண்பதற்கு முட்டுக்கட்டையாக இருக்கிறது என்று டாக்டர் நீலன் திருச்செல்வம் சொன்னார்.

(உ-ஐ-எ)

### சிறைத் தண்டனை

பேர்மிங்ஹாம், டிச 20

கடந்த அக்டோபரில் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி இங்கிலாந்துக்கு விஜயம் செய்த போது அவரைக் கொல்ல சதித்திட்டம் தீட்டிய குற்றச்சாட்டின் பேரில் இரண்டு சீக்கியருக்கு முறையே 16, 14 வருடச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

பேர்மிங்ஹாம் நீதிமன்றம் ஒன்று பத்துவார கால விசாரணையின் பின்னர் இன்று இத்தண்டனையை விதித்தது (உ)

# பன்குளத்திற்கு மேலதிக இராணுவம் அவசரமாக அனுப்பப்பட்டது

கொழும்பு டிச 21

திருகோணமலை பன்குளம் பகுதிக்கு மேலதிக இராணுவம் அவசரமாக அனுப்பப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை தமிழீழ விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் பன்குளத்தில் 3 விமானப்படைச் சிப்பாய்கள், 3 ஊர்காவல் படையினர் ஒரு பொலீஸ் கான்ஸ்டபிள் ஆகியோர் கொல்லப்பட்டனர்.

அதைத் தொடர்ந்தே இராணுவ பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

(உ-ஐ-அ)

வான் தடம் புரண்டது

## தலை துண்டாகி பிரயாணி மரணம்

### கொடிகாமத்தில் சம்பவம்

யாழ்ப்பாணம், டிச 21

வான் ஒன்று தடம் புரண்டதால் பிரயாணி ஒருவர் தலை துண்டிக்கப்பட்ட நிலையில் மரணமானார்.

நேற்று கொடிகாமத்துக்கு அருகாமையில் இச்சம்பவம் நடைபெற்றது.

அதிவேகமாகச்சென்று கொண்டிருந்த இந்த வான் மழை காரணமாக தடம் புரண்டதாகத் தெரியவருகிறது

விபத்தில் இரண்டு பிரயாணிகளும் காயமடைந்ததாகத் தெரியவருகிறது.

இதனிடையே கைதடிக்கு அருகாமையிலும் நேற்று வான் ஒன்றுதடம் புரண்டது.

எனினும் எவரும் காயமடையவில்லை. (உ-10)

நாட்டில் போர்

# யுத்தத்தில் வெல்லும் நிலையில் அரசு இருக்கிறதா?

### சந்தேகம் கிளப்புகிறார் நிதி அமைச்சர்

யாழ்ப்பாணம், டிச. 21

நாட்டின் மூன்றில் ஒரு பகுதியில் இன்று சிவில் யுத்தம் நடைபெறுகிறது.

இந்த யுத்தத்தில் வெற்றி பெறும் நிலையில் அரசாங்கம் இருக்கிறதா? அல்லது நாடு பிளவுபடுகிற நிலையில் உள்ளதா?

- இப்படிச் சந்தேகம் எழுப்பினார் நிதி அமைச்சர் ரொனி டி மெல்.

நேற்று நாடாளுமன்றத்தில் வரவுசெலவுத்திட்ட விவாதத்தில் பேசுகையிலேயே அவர் இப்படிக் கேட்டார்.

யுத்தத்தில் வெல்ல முடியாத நிலையில் நாம் இருப்போமானால் சமாதானத் தீர்வு ஒன்றைத் தான் நாம் காணவேண்டும்.

இந்தியாவின் ஆதரவுடன் சமாதானத் தீர்வை நாம் காண முடியும்.

யுத்த விரும்பிகளும் ஆயுத வியாபாரிகளும் தான் சமாதானத் தீர்வை இன்று விரும்புகிறார்கள் இல்லை. — இப்படி அவர் கூறினார்.

(உ-ஐ-எ)

## பதவி வெற்றிடம்

### கணக்காளர் (Accountant)

குறைந்தது எட்டு வருடங்கள் தனியார் நிறுவனமொன்றில் வேலை செய்தவராகவும் அதே நேரத்தில் பொறியியல் சம்பந்தப்பட்ட அனுபவம் உள்ளவராகவும் இருக்கவேண்டும். நீர் விநியோக வேலைகளில் அல்லது சுரங்க அமைப்பு வேலைகளில் தகைமை அல்லது அனுபவம் பெற்றிருந்தால் இன்னும் விரும்பத்தக்கது. தகைமையுள்ளோர் தமது தகைமைச் சான்றிதழ்களுடன் அடுத்த வருடம் (1-1-87) அன்று காலை 8-30 க்கு எமது கந்தோருக்கு சமுகம் அளிக்கவும். நன்றி.

ROCK ENGINEER & CONTRACTORS
POINT PEDRO ROAD, KOPAY.

### சுபநேரம்

21—12—1986

ஞாயிற்றுக்கிழமை சுபநேரம்.

9 24 முதல் 10 54 வரை ராகுகாலம்.

4.54 முதல் 6 24 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

# மூன்று மாகாண யோசனை 'அவுட்'

கொழும்பு, டிச.21

கிழக்கை மூன்று மாகாணங்களாகப் பிரிக்கும் இலங்கை அரசின் யோசனையை இந்திய இணை அமைச்சர்கள் நிராகரித்துவிட்டனர்.

—இப்படி இலங்கை அரசு வட்டாரங்கள் தெரிவித்தன என்று இந்தியா வானொலி நேற்று மாலை தெரிவித்தது.

இதனிடையில் இந்திய இணை அமைச்சர் குழு அண்மைக் காலத்தில் மீண்டும் வரும் வாய்ப்பு இல்லை என்று ராய்ட்டர் செய்தி ஸ்தாபனம் இலங்கை அரசு அதிகாரிகளை மேற்கோள் காட்டி நேற்று அறிவித்தது.

(உ-எ)

## இராணுவ வேட்டுக்கு வயோதிபர் பலி!

### வல்வையில் சம்பவம்

வல்வெட்டித்துறை, டிச. 21

வல்வெட்டித்துறை இராணுவ முகாமுக்கு அருகில் சென்ற வயோதிபர் சிப்பாய்களின் துப்பாக்கி வேட்டுக்குப் பலியானார்.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை 8 மணியளவில் நடந்தது.

செல்லத்துரை சித்தாமணி என்ற 80 வயது வயோதிபரே உயிரிழந்தவராவார்.

முகாமுக்கு அருகில் கிடந்த இவரின் சடலத்தை விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த போராளிகள் பெரும் பிரயத்தனத்துக்கு மத்தியில் நேற்று மாலை மீட்டு உறவினர்களிடம் கையளித்தனர்.

(உ-160)

### மூளைக்காய்ச்சல் பரவும் அபாயம்; தடுக்கச் சில ஆலோசனைகள்

# சிரட்டைகள் தகரங்களை வளவுகளில் வீசாதீர்கள்!

யாழ்ப்பாணம், டிச.21

பொதுமக்களே! பேராபத்து!!

மூளைக்காய்ச்சல் நோய்—வடமாகாணத்தில் வேகமாகப் பரவும் ஆபத்து உருவாகி இருக்கிறது.

அந்த நோய் பரவக் காரணமாக இருக்கும் 'கியுலக்ஸ்' நுளம்பு பெருகுவதைத் தடுக்க வேண்டிய பொறுப்பு உங்களிடமே உண்டு.

வீட்டுவளவில் சிரட்டைகளைவீசாதீர்கள். வெறும் தகரங்களைப் போடாதீர்கள். கூரைப் பீலியில் தண்ணீர் தங்கி நிற்காது பார்த்துக் கொள்ளுங்கள்.

இப்படி வடபிராந்திய சுகாதார சேவை இயக்குநர் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

இது குறித்து உங்களுக்குத் தேவையான விளக்கங்களையும் அவர் தந்திருக்கிறார்.

இதோ படியுங்கள்; செயலில் இறங்குங்கள்;

வேலணை, கைதடி, வரணி ஆகிய இடங்களில் மூளைக்காய்ச்சலினால் பீடிக்கப்பட்ட மூன்று குழந்தைகள் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

### அறிகுறிகள்

மூளைக்காய்ச்சலின் ஆரம்ப குறிகள்: காய்ச்சல், பலமான தலையிடி, உடல் நோவு, வலிப்பு ஆகியன;

இந்த அறிகுறிகள் தென்பட்டவுடன் உடனடியாக டாக்டரிடம் சென்று சிகிச்சை பெற வேண்டும்.

வயது வந்தவர்களிலும் பார்க்க குழந்தைகளையே மூளைக் காய்ச்சல் இலகுவில் பீடித்துக் கொள்கிறது.

'கியுலக்ஸ்' என்ற நுளம்புக் கூட்டமே இந்த நோயைப் பரப்புகிறது.

வளவுகளில் கவனிப்பாரற்றுக்கிடக்கும் தேங்காய்ச் சிரட்டைகள் பழைய டயர்கள், வெறும் தகரங்கள் பீலிகளில் தேங்கிக் கிடக்கும் நீரில் கியுலக்ஸ் நுளம்பு உற்பத்தியாகிறது, இப்பொருள்களை வளவுகளில் இருந்து உடனடியாக அகற்ற வேண்டும்.

### கட்டாக்காலிகள்

என்சபிலிடிஸ் வைரஸ் கிருமிகள் பன்றி மற்றும் கால்நடைகளில் நிறைய காணப்படுகின்றன. அவற்றை கட்டாக்காலிகளாகத் திரியவிடும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Lanka Cement Ltd.**
**KANKESANTHURAI**
**POSTS OF DIVERS**

**லங்கா சீமெந்து லிமிடெட்**
காங்கேசன்துறை
பதவி வெற்றிடங்கள் - சுழி ஓடுனர்

இலங்கா சீமெந்து லிமிடெட் காங்கேசன்துறை துறைமுகத்தில் சுழி ஓடுனருக்கான (Divers) 6 வெற்றிடங்கள் உடனடியாக நிரப்பப்படவுள்ளன. தகைமையுடைய விண்ணப்பதாரர்கள் வ. சீ லிமிடெட், காங்கேசன்துறை, துறைமுகத்தில் அதிகாரியின் காரியாலயத்தில் அலுவலக நேரங்களில் 22-12-86 திங்கள், 23-12-86 செவ்வாய், 24-12-86 புதன் வரையிலான நாட்களில் சமுகமளிக்கவும்.

சுழி ஓடுபவர் 25' - 30' வரை ஆழமுடைய துறைமுகத்தில் பிராணவாயு போத்தலுடன் ( With aid of oxygen Cylinder ) சுழி ஓடத் தகைமையுடையோராக இருத்தல் வேண்டும்.

பொது முகாமையாளர்
லங்கா சீமெந்து லிமிடெட்.



**வாடிக்கையாளர்கட்கு !**

சகலவித கேக் வகைகளுக்குத் தேவையான சாமான்களும் அலங்காரப் பொருட்களும்
மற்றும் நானுவித பொருட்களையும்
ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்
*
**சண்முகம் றேட்ஸ்**
இல: 65,(185), பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.



நத்தார் புது வருடவிசேஷ வாய்ப்பு
(ஞாயிற்றுக்கிழமை களிலும் திறந்திருக்கும்)
**மாபெரும்**
**மலிவு விற்பனை**
டிசெம்பர் மாதம் 1ஆம் திகதி தொடக்கம் 31ஆம் திகதி வரை
* ஆண்கள் * பெண்கள்
* சிறுவர்களுக்கு
உகந்த சிறந்த துணிவகைகளுக்கும்
தைக்கப்பட்ட உடைகளுக்கும்
மற்றும்
லேடன் தயாரிப்புகளுக்கும்
உடன் நாடுங்கள்
**லேடன் காமென்ஸ்**
235, ஆஸ்பத்திரி வீதி,
(சத்திரச் சந்தி அருகாமையில்)
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 23608


## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் திரு. செல்லர் மகராஜா
(ஓய்வுபெற்ற பிரதம லிகிதர்)

மலர்வு: 25.10.1931
உதிர்வு: 01-01-1986
திதி: 21-12-1986

அப்பா! மரணம் தவிர்க்க முடியாதது என்பதை மனது புரிந்துகொள்கிறது.
இருந்தாலும் நீங்கள் இல்லாத—
வெற்றிடத்தை நிரப்ப இயலாமல்—
எங்கள் இதயங்கள் ஏங்குகின்றனவே!

உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்,
மனைவி, மக்கள்,
உற்றார், உறவினர்.

'சக்தி அகம்',
பலாலி தெற்கு.
வயாவிளான்.

யாழ் மாநகர சபைப் பகுதியில்

# மீற்றர் மோசடி கண்டுபிடிக்க திடீர் பரிசோதனைக் குழு

மக்கள் முகம்

## ரூ. 2,500 அபராதம்

யாழ்ப்பாணம், டிச. 21

சட்டவிரோத மின் பாவனை செய்வோரையும், மீற்றர்களில் குழறுபடி செய்வோரையும் கண்காணிக்க யாழ் மாநகரசபை திடீர் பரிசோதனைக்குழு ஒன்றை நியமித்துள்ளது.

யாழ் மாநகர ஆணையாளர் இதனைத் தெரிவித்தார்.

பிடிபடுவோரிடம் 2500 ரூபா தண்டம் வசூலிக்கப்படும். மின்சார இணைப்பு துண்டிக்கப்பட்டு மின்உபகரணங்களும் பறிமுதல் செய்யப்படும்.

சட்டவிரோத மின் பாவனையால் யாழ் மாநகரசபை மாதாந்தம் 9 லட்சம் ரூபாவை இலங்கை மின்சார சபைக்கு அபராதமாகச் செலுத்தவேண்டியுள்ளது என்றும் ஆணையாளர் தெரிவித்தார்.

பிரஸ்தாப திடீர் பரிசோதனைக் குழு ஏற்கனவே செயற்பட ஆரம்பித்துவிட்டது.

மீற்றர்களில் மாற்றம் செய்துள்ள ஒருசில வீடுகள் திடீர் பரிசோதனைக்கு உள்ளாகி இருக்கின்றன. (இ-5)

## கம்பியூட்டர் பரீட்சை முடிவுகள் வெளியாகின

யாழ்ப்பாணம் டிச. 21

யாழ் பல்கலைக்கழகம் நடத்திய கம்பியூட்டர் தேர்வுக்குரிய பெறுபேறுகள் வெளியிடப்பட்டன.

இத்தேர்வில் 35 பரீட்சார்த்திகள் சித்தியடைந்தனர் அவர்களின் பெயர்கள் பல்கலைக் கழக சிரேஷ்ட உதவிப் பதிவாளர் அறிவித்தல் பலகையில் பார்த்துத் தெரிந்து கொள்ளலாம் என்று துணைவேந்தர் பேராசிரியர் எஸ். வித்தியானந்தன் தெரிவித்தார். (உ-எ)

## வவுனியா நகரசபை நூல் நிலையத்துக்கு நூல்கள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், டிச. 21

வவுனியா நகரசபையின் பொதுநூல் நிலையத்துக்கு பத்தாயிரம் ரூபா பெறுமதியான நூல்களை உள்ளூராட்சித் திணைக்களம் அன்பளிப்புச் செய்துள்ளது.

நூல்களை வவுனியா உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு பொ. கமலநாதன், நூலகப் பொறுப்பாளர் திரு மு. சண்முகநாதனிடம் அண்மையில் கையளித்தார்.

இதனிடையில் மேலும் புதிய நூல்களைக் கொள்வனவு செய்யும் முயற்சியில் வவுனியா நகரசபைச் செயலாளர் திரு இ. இராமலிங்கம் ஈடுபட்டிருக்கிறார்.

இப்பொதுநூல் நிலைய வளர்ச்சி குறித்து எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் பொதுமக்களின் பாராட்டுதல்களைப் பெற்றுள்ளன. (இ-எ)

## ஒரு லட்சம் ரூபா ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், டிச. 21

யாழ் நவீன சந்தையை திருத்தும் வேலைகளுக்கென யாழ் மாநகரசபை உத்தேச வரவு செலவுத் திட்டத்தில் ஒரு லட்ச ரூபாவை ஒதுக்கியுள்ளது (உ)-5)

## இளைஞன் பலி!

கல்முனை டிச, 21

கல்முனைப் பகுதியில் வேளாங்குறிச்சி என்னும் இடத்தில் கடந்த வியாழக்கிழமை மாலை வடிவேல் ஆறுமுகம் என்ற 21வயது இளைஞன் ஆயுதபடையினரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

சடலம் ஆயுதபடையினரால் சவுவாஞ்சிக்குடி முகாமுக்கு எடுத்துச் செல்லப்பட்டது (உ-எ-84)

## ஊழியர்கடனுதவி சிக்கன கூட்டுறவுச்சங்கம்

யாழ்ப்பாணம், டிச. 21

வவுனியா நகரசபை ஊழியர் கடனுதவி சிக்கன கூட்டுறவுச் சங்கம் ஒன்று அண்மையில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

நகரசபைச் செயலாளர் திரு ஆர். இராமலிங்கம் அங்குரார்ப்பணக் கூட்டத்துக்குத் தலைமை வகித்தார்.

சங்க நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்:

தலைவர்: திரு. மு. சண்முகநாதன் (நூலகம்)
செயலாளர்: திரு எஸ். கெங்காதரன் (வருமான மேற்பார்வையாளர்)
பொருளாளர்: திரு ஏ. அந்தோனிப்பிள்ளை (சுகாதார பரிசோதகர்)

கூட்டுறவு பரிசோதகர் திரு. க. மயில்வாகனமும் கூட்டத்துக்குச் சமுகமளித்திருந்தார். (இ-எ)

## யாழ் தபாலக அதிகாரிகள் மீது விசாரணை

யாழ்ப்பாணம், டிச 21

யாழ். தபாலக பிரதம தபால் அதிபர் உட்பட சில உயர் அதிகாரிகளை மேல்மட்ட விசாரணைக்காக தபால் திணைக்களம் அனுராதபுரத்திற்கு அழைத்துள்ளது.

கடந்த ஏப்ரல் மாதம் பிற்பகுதியில் யாழ் மத்திய கல்லூரிக்கு முன்பாக நடைபெற்ற பணம், முத்திரைகள் கொள்ளை சம்பந்தமான விசாரணை நடத்துவதற்கே இவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது (இ-10)

## சிகிச்சை நிலையம்

யாழ்ப்பாணம், டிச. 21

தெல்லிப்பளை சுகாதாரப்பகுதியின் சுகாதார அபிவிருத்திச்சபை அப்பகுதியிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களினூடாக சொறி சிரங்கு உள்ள பகுதிகளுக்கு நடமாடும் சிகிச்சை நிலையங்களை அமைக்க உள்ளது.

முதல் சிகிச்சை நிலையம் இம்மாதம் 20ஆம் திகதி புன்னாலைக்கட்டுவனில் நடத்தப்படும்.

இதைத் தொடர்ந்து ஏனைய கிராமங்களுக்கும் சேவை தொடரும்.

சேவை தேவைப்படுவோர் அப்பகுதி குடும்பநல சேவையாளர் அல்லது சுகாதாரப் பரிசோதகரிடம் தகவல்களைப் பெறலாம் என சுகாதார அபிவிருத்திச்சபைச் செயலாளர் திரு. கி. இராமச்சந்திரன் தெரிவித்துள்ளார். (இ-5)

## ஓராண்டு நினைவஞ்சலி



செல்வன்
**கந்தையா ரூபதநிதி (ரூபன்)**
அச்சுவேலி

தோற்றம்: 24-6-1961
மறைவு: 21-12-1985

ஓராண்டு காலம் ஓடி மறைந்தாலும் உங்கள் அன்பும் நினைவும் எங்கள் மனதை விட்டு என்றும் மறையாது.
ஓராண்டில் நீ விதைத்த போர் விதைகள் நீண்டெழுந்து வேரூன்றி தமிழர் விடுதலையைப் பெற்றெடுக்கும்

ஸ்ரீ விக்னேஸ்வரா வீதி, அச்சுவேலி,
தாய், தந்தை சகோதரர்கள்

## கிழக்கைப் பிரிப்பது முட்டாள்த்தனம்

### கல்முனை முன்னாள் எம். பி கருத்து

கல்முனை, டிச. 21

கிழக்கு மாகாணத்தை மூன்று மாகாணங்களாகப் பிரிப்பது முட்டாள்த்தனமான செயல்.

இப்படி கல்முனையின் முன்னாள் எம் பி. ஜனாப். எம். சி. அகமது உதயனுக்குத் தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்துடன் கிழக்கு மாகாணத்தை இணைப்பதை விட மிக மோசமான செயல் இது என்று ஜனாப். அகமது இதனை வர்ணித்தார்.

(உ-எ-84)

## தமிழ் இளைஞர் கைது

திருகோணமலை டிச 21

திருமலை, சிவன்கோயில் பகுதியில் இரகசியப் பொலீஸரால் தமிழ்இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

இம் மாதம் 14 ஆம் திகதி இச்சம்பவம் இடம் பெற்றது.

(உ-எ-84)

## ஹாட்லி முதலிடம்

வல்வெட்டித்துறை, டிச 21

1986ஆம் ஆண்டுக்கான பாடசாலைகளுக்கான விஞ்ஞானப் போட்டிகளில் யாழ் மாவட்டத்தில் பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி முதல் இடத்தைப் பெற்றுக் கொண்டது

போட்டிக்கான பரிசு கடந்த 8ஆம் திகதி ஜனாதிபதியினால் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற இலங்கை விஞ்ஞானமுன்னேற்றக்கழகத்தின் 42ஆவது ஆண்டு விழாவில் வைத்து வழங்கப்பட்டது.

கல்லூரியின் போட்டிக் குழு சார்பில் அதன் அணித்தலைவன் செல்வன் சு. இராதன் மார்க்கண்டன் பரிசினைப் பெற்றுக் கொண்டார்.

போட்டிக் குழுவின் ஏனையோர் விபரம் செல்வன் தெ. நக்கீரன், செல்வன் ப. ரமேஷ், செல்வன் சி. மணிவண்ணன் செல்வன். செ. தேவகுமார்.

## இளைஞர் புத்தெழுச்சி திட்டம்

கொழும்பு, டிச. 21

'இளைஞர் புத்தெழுச்சி' திட்டத்தை தேசிய இளைஞர் சேவை மன்றம் 1987 ஜனவரி மாதத்தில் இலங்கை முழுவதும் கொண்டாடத் திட்டமிட்டுள்ளது.

பாடசாலைகள், உயர் கல்வி நிறுவனங்கள், அரச, தனியார் நிறுவனங்கள், பாடசாலைகளை விட்டுச் சென்ற இளைஞர், யுவதிகள் போன்ற சகல பிரிவினரும் இத்திட்டத்தில் பங்கு கொள்ளலாம் என்று தேசிய இளைஞர் சேவை மன்றம் அறிவித்துள்ளது (இ-எ)

## அம்மன் கோயிலை சேதமாக்கியவர்கள் பொலீஸார்தான்

### கல்முனை ஏ.எஸ் பி. ஏற்றுக்கொள்கிறார்

அம்பாறை, டிச. 21

கல்முனை தரவை அம்மன் கோயிலை முற்றாகச் சேதமாக்கியவர்கள் யார்?

இக்கேள்விக்கு கல்முனை உதவிப் பொலீஸ் அதிபர் டபிள்யு பி. ஆர். சேனநாயக்கா பொலீஸ் - பொதுமக்கள் நல்லுறவுக் குழு அங்குரார்ப்பணக் கூட்டத்தில் பதிலளித்தார்.

"பொலீஸாரை முதலில் தீவிரவாதிகள் அக் கோயிலுக்குள் இருந்து தான் தாக்கினார்கள். அதன் பின்னரும் தீவிரவாதிகள் கோயிலுக்குள் ஒளிந்து இருக்கிறார்கள் என்று தெரிய வந்தது. அதைத் தொடர்ந்தே கோயில் பின்னர் சேதமாக்கப்பட்டது"— இப்படி உதவிப் பொலீஸ் அதிபர் திரு. சேனநாயக்கா தெரிவித்தார்.

ஏன் பொலீஸார் அம்மன் கோயிலை சேதமாக்கினர் என்று கூட்டத்தில் கலந்து கொண்ட தமிழ் மக்கள் எழுப்பிய கேள்விக்கே மேற்கண்ட பதில் அளிக்கப்பட்டது

உதவிப் பொலீஸ் அதிபர் மேலும் தெரிவிக்கையில் பொலீஸார் வேண்டும் என்று பொதுமக்களைத் தாக்குவதில்லை. தீவிரவாதிகள் ஆத்திரமூட்டும்போது தான் உணர்ச்சி வசப்பட்டுத் தாக்கி விடுகின்றனர் என்றார்.

(இ-எ-14)


நவீன அணுகுமுறையில் தயாரிக்கப்பட்ட சக்தி வாய்ந்த திரவ கெந்தகம் (சல்பர்)

**சுப்பர் சிக்ஸ்**




மிளகாய் குருமன் நோயை கட்டுப்படுத்தவும் திராட்சை பூஞ்சண நோய் (டௌனி மில்டியு) கட்டுப்படுத்தவும் மற்றும் பயிர்களில் இலையில் ஏற்படும் துரு நோயையும் சிற்றுண்ணிகளையும் கட்டுப்படுத்த அதி சிறந்தது.

எச்சரிக்கை!- எல்லா பீடைநாசினிகளும் அபாயகரமானவை கவனமாக கையாளவும்.

விலை:
200 மி.லி. ரூ. 31.50
500 மி.லி. ரூ. 65.50
9.46 லீ. ரூ. 1110.00

அங்லோ-ஏசியன் பேர்டிலைசர்ஸ் லிமிட்டெட்
த பெ. இல. 1034, சாற்ரட் வங்கி கட்டிடம் கொழும்பு-1.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

### உதய சங்கற்பம்

நன்மை செய்யவும் தானதர்மம் பண்ணவும் மறவாதிருங்கள்: இப்பேர்ப்பட்ட பலிகளின் மேல் தேவன் பிரியமாக இருக்கிறார்.

— பைபிள்

உதயன்
உண்மை - விழிப்புணர்வு - நடுநிலைமை

இல.15 2ஆவது ஒழுங்கை தொலைபேசி: 24805
மின்சார நிலைய வீதி, 22078
யாழ்ப்பாணம். 21-12-1986 த.பெ. இல. 23

# புதிய அத்தியாயம் புதுவழி காட்டுமா?

தமிழீழப் புலிகள் சிறைப்பிடித்து வைத்திருந்த யுத்தக் கைதிகளான இராணுவச் சிப்பாய்கள் இருவரும் விடுவிக்கப்பட்டனர். அவர்களுக்காக இரண்டு விடுதலைப் புலிகளை விடுவித்துப் பரிமாற்றம் செய்திருக்கிறது ஸ்ரீலங்கா அரசாங்கம்.

யுத்தக் கைதிகளை இரண்டு நாடுகள் பரிமாறிக் கொள்வதுதான் வழக்கம். ஆகையால் ஸ்ரீலங்கா வேறு நாடு. தமிழ் ஈழம் வேறு நாடு— தனிநாடு என்று அமைச்சர் லலித் அரசு ஏற்றுக் கொண்டு விட்டதாக புலிகள் பிரமுகர் கிட்டு கருத்துத் தெரிவித்திருக்கிறார்.

கைதிகள் பரிமாற்றத்துக்கு வேறு சொற்றொடரைப் பயன்படுத்திய போதிலும், அதன் மூலம் இருதரப்பிலும் புதிய நம்பிக்கை உணர்வு தோன்றி இருப்பதாக அமைச்சர் அத்துலத் கூறியுள்ளார். இது மேலும் முன்னேற்றத்துக்கு வழிகோலும் என்று மேலும் ஒருபடி உயரச் சென்றிருக்கிறார் அவர்.

கைதிகள் பரிமாற்றத்தை ஒரு நல்லெண்ணத் தனமாக அரசாங்கம் பயன்படுத்துமானால் அதற்கு எதிராக எவரும் இருக்கமாட்டார்கள்.

ஏனெனில் இனப்பிரச்சினைக்கு விரைவில் தீர்வு கிடைத்துவிட வேண்டும் என்பதில் தமிழர்கள் மட்டும் ஆர்வமாக இருக்கவில்லை. சிங்கள மக்களிடமும் அதே ஆவல், ஆர்வம் உண்டு.

ஆனால் தீர்வு எப்படி அமைய வேண்டும் என்பதிலேயே கருத்து வேற்றுமைகள் நிலவுகின்றன.

தமது மண் காப்பாற்றப்பட வேண்டும்; அது அங்கீகரிக்கப்பட வேண்டும். தாம் ஒரு தனி இனம் என்பது ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். அந்த இனத்துக்கு ஆளும் உரிமை வேண்டும். இந்த மூன்று அம்சங்களை அடிப்படையாகக் கொண்டதே தமிழர் கோரிக்கை.

ஆனால் தமிழர் கோரிக்கையை வழங்குவதற்கு சிங்கள அரசாங்கம் விரும்பவில்லை. சிங்கள மக்களில் பலரும் அதற்கு உடன்பாடில்லை. தமிழர்களின் அடிப்படை உரிமைக் கோரிக்கைகளை வழங்கினால் தமக்கு ஏதோ ஆகிவிடும் என்று அஞ்சுகிறார்கள். அதுவெறும் மாயை நிலை என்பதைப் புரிகிறார்கள் இல்லை.

இனப்பிரச்சினை விடயத்தில் தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் இடையில் மிகப்பெரிய இடைவெளி உண்டு. அதனைக் குறைப்பதற்கு சிங்கள மக்கள் மத்தியில் புரிந்துணர்வு அவசியம். குறிப்பாகத் தமிழர் உரிமைகளுக்காகப் போராடிவரும் தமிழ்ப் போராளிகள் குறித்துப் புரிந்துணர்வு அவசியம்.

அந்தப் புரிந்துணர்வின் முதலாவது அத்தியாயமாக கைதிகள் பரிமாற்றம் அமையுமானால் பெரும் வரப்பிரசாதமாகி விடும்.

கசப்புணர்வும், பகைமையும் சிறு நல்லெண்ணத்தின் மூலம் உடைத்தெறியப்படுவதும் உண்டு. அந்தச் சிறு நல்லெண்ணமாக இந்தக் கைதிகள் பரிமாற்றம் அமையுமானால் அதுவே பிரச்சினையின் தீர்வுக்கு அத்திவாரமாகியும் விடலாம். நீண்டகால இடைவெளிக்குப்பின்னர் இருசாராருக்கும் இடையில் உருவான புரிந்துணர்வாகவும் இது விளங்குகிறது. அதனை மேலும் உரிய அளவுக்கு வளர்த்து எடுப்பின் நற்பயன் விளையலாம்.

பேச்சுவார்த்தை மேடையில், தமிழர்கள் விட்டுக்கொடுக்கக் கூடிய அளவுக்கு விட்டுக் கொடுத்துவிட்டார்கள். இனிமேல் விட்டுக்கொடுக்கவேண்டியவர்கள் ஸ்ரீலங்கா அரசாங்கத்தினரே. அதற்கேற்ற மனமாற்றத்தையும், பக்குவத்தையும் ஏற்படுத்துவதற்கு வெள்ளிக்கிழமையின் புதிய நம்பிக்கையும் புரிந்துணர்வும் துணைநிற்பின் தீர்வு நிச்சயம் சாத்தியமாகும்.

எமது சிப்பாய்களை மீட்டுவிட்டோம், இனி உங்களுக்குப் "பேப்பே" என்ற போக்கில் அரசு நடந்துகொள்ள முனைந்தால் நாடு தொடர்ந்தும் சீரழியும். அவ்வளவுதான்!

## சாரதாதேவி ஜெயந்தி விழா

யாழ்ப்பாணம், டிச.21

எதிர்வரும் 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 5.00 மணி அளவில் தூய அன்னை ஸ்ரீ சாரதாதேவி ஜெயந்தி விழா திருநெல்வேலி ஆடியபாதம் வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ ராமகிருஷ்ணாலயத்தில் நடைபெறும்.

பஜனையைத் தொடர்ந்து, தூய அன்னையின் ஆத்மீகத் தொண்டு என்ற பொருள்பற்றி கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன் சொற்பொழிவாற்றுவார்.

தொடர்ந்து திருமதி நாகேஸ்வரி பிரம்மானந்தாவின் இசைக் கச்சேரியும் இடம்பெறும். (இ)



### பொய்யாமொழி

**குறள்:**

குடம்பை தனித்தொழியப் புள்பறந் தற்றே
உடம்போடு உயிரிடை நட்பு.

**பொருள்:**

உடம்போடு உயிர்க்கு உள்ள உறவு, தான் இருந்த கூடு தனியே இருக்க அதை விட்டு வேறு இடத்துக்குப் பறவை பறந்தாற் போன்றது.

## உதயன் ஞாயிறு விவரணச் சிறப்பம்சம்

# சரித்திரத்தில் ஒரு வெற்றி!

## கைதிகள் பரிமாற்றம்

### புரிந்துணர்வை வளர்க்க வேண்டும்

இலங்கைத் தமிழர் போராட்ட வரலாற்றிலே முதன் முறையாக நடந்த கைதிகள் பரிமாற்றம் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. அது பற்றிய ஒரு கண்ணோட்டமே இக்கட்டுரை

நடக்கும் என்பார் நடக்காது! நடக்காது என்பார் நடந்துவிடும்!! ஆம் அப்படியே நடந்து விட்டது.

வெள்ளிக்கிழமை காலை 8 மணி இருக்கும். யாழ்ப்பாணம் குருக்குத் தெருச் சந்தியில் புலிகள் வாக்கிடோக்கியுடன் நிற்கின்றனர்.

நடக்கத் தொடங்கி விட்டோம்'— இப்படி வாக்கிடோக்கி பேசுகிறது.

சுமார் 12 மைல் தொலைவில் உள்ள பலாலிப் பகுதியில் இருந்து வரும் குரல் அது.

இரண்டு புலிகளும் விடுவிக்கப்பட்டு விட்டனர் என்பதை அறிவிக்கும் சைகை அது.

யாழ் குருக்குத் தெருச் சந்தியில் நிற்கும் புலிகளும் கோட்டை முகாம் நோக்கி நடக்கத் தொடங்குகின்றனர்.

கூடவே சிறைப்பிடிக்கப்பட்ட இரண்டு ஸ்ரீலங்கா சிப்பாய்களும் செல்கின்றனர்.

கைதிகள் பரிமாற்றம் மன்னிக்கவும் (அத்துலத் முதலியின் பாஷையில் சொன்னால்) நல்லெண்ணப் பரிமாற்றம் முடிகிறது.

### நிபந்தனை

அடம்பனில் சிறைப்பிடிக்கப்பட்ட இரண்டு ஸ்ரீலங்கா சிப்பாய்களை விடுவிக்க வேண்டும் என்று சொன்னால் சிறையில் உள்ள இரண்டு புலிகளை விடுவிக்கவேண்டும்— இப்படி புலிகள் இரண்டு மாதங்களுக்கு முன்னரே 'நிபந்தனை' போட்டனர்.

இதெல்லாம் நடக்காது. கெரில்லாக்கள் நிபந்தனை போட்டு கைதிகள் பரிமாற்றம் உலகில் எங்குமே நடந்தது இல்லை — இப்படி லலித் அத்துலத்முதலி அச்சமயம் அடித்துச் சொல்லியிருந்தார்.

இதனிடையில் விஜே குழு, சிப்பாய்களை சிறை மீட்க ஆகாய மார்க்கமாகப் 'படை' எடுத்து வந்தது பலனளிக்கவில்லை.

பின்னர் அரசின் மறைமுக ஆசியுடன் கோட்டை இராணுவ அதிகாரிகள் 'புலிகளின் பாதுகாப்புடன்' வெளியே வந்து புலிகளுடன் சிப்பாய்கள் விடுதலை பற்றிப் பேசிப்பார்த்தனர். சரிவரவில்லை.

விஜேகுழு இரண்டாம் தரம் 'அனுராதபுரம் தடை'தாண்டி பௌத்த குருமார்களுடன்வந்தது. அது பழைய பூங்காவிலே பிரித் ஓதியதுடன் முடிவடைந்தது.

நிபந்தனையை ஏற்று இரண்டு தமிழீழ விடுதலைப் புலிகளை விடுவித்து, சிப்பாய்களைச் சிறை மீட்பதா?

அரசுக்கு மனம் இடம் கொடுக்கவில்லை இது நடக்காது என்று பலரும் கருதினர்.

**விஜே செய்த உதவி**

ஆனால் விஜே குழுவினர் தென் இலங்கையில் மேற்கொண்ட பிரசாரங்களின் தாக்கம்தான் என்னவோ, நடக்கமுடியாது என்று எண்ணப்பட்டது நடந்துவிட்டது.

பாதுகாப்பு அமைச்சர் சிப்பாய்களை மீட்க படைத் தளபதிகளுடனே பலாலி முகாமுக்கு வெள்ளி அதிகாலை வந்து சேர்ந்துவிட்டார். அதுவும் ஜனாதிபதிக்குரிய தனிவிமானத்தில் வந்து சேர்ந்தார்.

பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் சேபால ஆட்டிகலை, கூட்டுத் தளபதி ஜெனரல் சிறில் ரணதுங்க, இராணுவத் தளபதி ஜெனரல் நலின் ஜெனவிரத்தின ஆகியோருடன் பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலி முன்னிலையில் இரண்டு விடுதலைப் புலிகள் விடுவிக்கப்பட்டனர்.

*தீபன்ராஜா*

போய்வாருங்கோ! என்று அமைச்சர் புலிகளை வழியனுப்பிவைத்தார்.

பலாலி முகாமிலே நின்று, வயாவிளான் எல்லையிலே புலிகள் தளபதி கிட்டு விடுதலையான இரண்டு புலிகளையும் வரவேற்பதை அமைச்சரும் அவரின் தளபதிகளும் கண்குளிர தொலைநோக்கிக் கண்ணாடி மூலம் நிச்சயம் பார்த்திருப்பர்.

ஏனென்றால் புலிகள் நின்ற இடத்தில் இருந்து பார்த்தபோது அமைச்சர் தென்பட்டார்.

அதன்பின்னர் விடுவிக்கப்பட்ட புலிகளை அழைத்துக்கொண்டு ஏனைய புலிகள் புறப்பட்டனர்.

அதைத்தான் 'நடக்கத் தொடங்கிவிட்டோம்'— என்று வாக்கிடோக்கித் தகவல் தெரிவித்தது.

அதன்பின்னர்தான் சிப்பாய்கள் கோட்டை முகாம் கப்டன் கொத்தலாவலையிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

### யுத்த நிறுத்தம்

இந்த 'நல்லெண்ணப் பரிமாற்றம்' இடம்பெற ஒருதற்காலிக யுத்தநிறுத்தம் அமைச்சரின் மேற்பார்வையில் அனுஷ்டிக்கப்பட்டது.

சிப்பாய்களுடன் திரும்பிய அமைச்சர் அத்துலத்முதலியின் கொழும்புக் கதைகளைக் கேட்டால்... ...

'விழுந்தவன் மீசையில் மண்ஒட்டவில்லை' என்று கூறிய கதைதான் நினைவுக்கு வருகிறது.

அத்துலத் முதலியின் அகராதியே தனிதான். சொல்லுக்குச் சொல் அர்த்தம் கண்டுபிடிப்பதில் அவரை 'இண்டர்பிரிடேசன் முதலி' என்றே சொல்லலாம்.

அவரைப் போன்றவர்கள் இருப்பதால்தான் இன்று அரசியலே ஓடுகிறது'. இல்லையேல் அரசியல்' படுத்து'விடும்!

1985 திம்புப் பேச்சுக்களுக்கு முன்னர் யுத்த நிறுத்தம் கொண்டு வரப்பட்டது

இரண்டு அரசாங்கங்களுக்கும் இடையே ஏற்படுவது தான் யுத்த நிறுத்தம். இது யுத்த நிறுத்தம் (Cessefire) அல்ல. இது சண்டை தவிர்ப்பு நிறுத்தம் (Cessation of hostilities) என்று சொன்னவர்தான் அத்துலத்முதலி.

இரத்மலான விமான நிலையத்தில் பிரமுகர் தங்கும் அறை. கொழும்பு மற்றும் வெளிநாட்டுச் செய்தியாளர் மத்தியில் [illegible]

செய்தியாளர்: இது கைதிகள் பரிமாற்றம் தானே!

அத்துலத்: கைதிகள் பரிமாற்றம் என்பதை மறுக்கின்றேன் நல்லெண்ணத்தின் அடிப்படையில் சிப்பாய்களை புலிகள் விடுதலை செய்தனர். அதற்குப்பதிலாக இரண்டு புலிகளை விடுதலை செய்து எமது நல்லெண்ணத்தைக் காட்டினோம். நிபந்தனை போடப்படவில்லை. எல்லாம் நல்லெண்ணத்தின் அடிப்படையிலே தான் நடந்தது.

செய்தியாளர்: இரு தரப்புக் கைதிகளும் ஒரே

(4 ஆம் பக்கம் பார்க்க)

# 28 வருட சுற்று வட்டக் கலண்டர்

(1-1-1901 தொடக்கம் 31-12-1999வரை)

| மாதம் | | | ஆண்டு | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 0 | 1 | 2 | 3 | — | 4 | 5 |
| | | | 6 | 7 | — | 8 | 9 | 10 | 11 |
| | | | — | 12 | 13 | 14 | 15 | — | 16 |
| | | | 17 | 18 | 19 | — | 20 | 21 | 22 |
| | | | 23 | — | 24 | 25 | 26 | 27 | — |
| ஜனவரி | ஏப்ரல் | ஜூலை | I | II | III | IV | V | VI | VII |
| ஜனவரி | அக்டோபர் | — | II | III | IV | V | VI | VII | I |
| மே | — | — | III | IV | V | VI | VII | I | II |
| பெப்ரவரி | ஆகஸ்ட் | — | IV | V | VI | VII | I | II | III |
| பெப்ரவரி | மார்ச் | நவம்பர் | V | VI | VII | I | II | III | IV |
| ஜூன் | — | — | VI | VII | I | II | III | IV | V |
| செப்டம்பர் | டிசெம்பர் | — | VII | I | II | III | IV | V | VI |

I

| ஞா | தி | செ | பு | வி | வெ | ச |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | * | * | * | * |

II

| தி | செ | பு | வி | வெ | ச | ஞா |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | * | * | * | * |

III

| செ | பு | வி | வெ | ச | ஞா | தி |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | * | * | * | * |

IV

| பு | வி | வெ | ச | ஞா | தி | செ |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | * | * | * | * |

V

| வி | வெ | ச | ஞா | தி | செ | பு |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | * | * | * | * |

VI

| வெ | ச | ஞா | தி | செ | பு | வி |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | * | * | * | * |

VII

| ச | ஞா | தி | செ | பு | வி | வெ |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | * | * | * | * |

இந்த நவீன கலண்டர் 01-01-1901 தொடக்கம் 31-12-1999 வரை பார்ப்பதற்குரிய முறையில்தயார் செய்யப்பட்டுள்ளது. வாசகர்கள் செய்ய வேண்டியது பின்வருமாறு:

நூற்றாண்டு 19 ஐத் தவிர்த்து 01 தொடக்கம் 99 வரையுள்ள ஆண்டு எண்களை 28 ஆல் பிரித்துவரும் மீதி எண்களே ஆண்டு என்ற பகுதியில் 1 தொடக்கம் 27 வரை எழுதப்பட்டுள்ளன. (உ-ம்) 1986 ஆம் ஆண்டு எனின் 86 ஐ 28 ஆல் பிரித்தால் வரும் மீதி எண் 2 எனக் கொள்க.

மாதம் என்ற பகுதியில் மாதங்கள் ஜனவரி தொடக்கம் டிசெம்பர் வரை எழுதப்பட்டுள்ளன. தடித்தஎண்கள் லீப் வருடங்கள் எனவும் தடித்த எழுத்துக்களால் எழுதப்பட்ட ஜனவரி, பெப்ரவரி மாதங்கள் லீப் வருடங்களில் வரும் மாதங்கள் எனவும் கொள்க.

தரப்பட்ட ஆண்டில் வரும் மாதங்களினது கலண்டரை அந்தந்த மாதங்களுக்கு நேரே ஆண்டின் மீதி எண்ணுக்குக் கீழே பார்த்தால் நீங்கள் பார்க்க வேண்டிய கலண்டரின் ரோமன் இலக்கம் தெரியும்.

அந்தந்த ரோமன் இலக்கத்தில் குறிக்கப்பட்ட கலண்டரே தரப்பட்ட ஆண்டு, மாதம், திகதி உள்ளடக்கிய கலண்டராகும்.

உதாரணமாக:-

ஸ்ரீலங்கா வெள்ளையரிடமிருந்து சுதந்திரம் பெற்ற தினம் 04-02-1948 இது என்ன நாளில் வருகின்றது எனப் பார்ப்போம்.

48ஐ 28ஆல் பிரித்தால் மீதி எண் 20. இது லீப் வருடமாகும். 20இன் கீழ் லீப் வருடத்தில் வரும் பெப்ரவரி மாதத்தை நோக்கினால் ரோமன் இலக்கம் I என்று இருப்பதை அவதானிக்கலாம். ஆகவே I என்றிருக்கும் கலண்டரைப் பார்த்தால் 4ந் திகதி புதன்கிழமையாகும்.

1983 ஆம் ஆண்டு யூலை மாதம் 25ந் திகதி என்ன தினம் எனப் பார்ப்போம்.

83 ஐ 28 ஆல் பிரித்தால் மிகுதியாக வரும் எண் 27. 27 ன் கீழ் ஜூலை மாதம் VI என்றிருப்பதைக் காணலாம். VI என்றிருக்கும் கலண்டரைப் பார்த்தால் 25 ஆம் திகதி திங்கட்கிழமையாகும்.

1989 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி என்ன தினம் எனப் பார்ப்போம்.

89 ஐ 28 ஆல் பிரித்தால் மீதி எண்ணாக வருவது 5. 5 இன் கீழ் ஆகஸ்ட் மாதம் III என இருப்பதைப் பார்த்தால் III என இருக்கும் கலண்டரில் 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை.

தயாரிப்பு: எஸ். ஆர் பேரின்பநாயகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

COMPUTER PROGRAMMING
BASIC LANGUAGE
Weekends — 6 months
Fees Rs 1500/-
Commencement 24-01-1987
**Cantabia Institute**
(PIONEERS IN COMPUTER EDUCATION)
21, Main Street, Jaffna.
T'Phone: 24201

# உதயன்

21 12 1986 ஞாயிற்றுக்கிழமை

RADIO, T. V. & ELECTRONIC
ENGINEERING COURSE
Weekends — 7 months
G. C. E. (O/L) பரீட்சை
எழுதியவர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு
Fees ரூ. 250/- வீதம்
6 மாதங்களுக்கு
ஆரம்பம்: 27-12 86 10 மணி
**Cantabia Institute**
21, Main Street, Jaffna.
T'Phone: 24201

## சரித்திரத்தில் - - -

(3ம் பக்கத் தொடர்ச்சி)

நேரத்தில் விடுவிக்கப் பட்டனரா?

அத்துலத்: புலிகள் சிப்பாய்களை விடுவித்த பின்னர் தான் நாம் புலிகளை விடுவித்தோம்.

அத்துலத்தின் அகராதியில் 'நிபந்தனை'க்கு மறுபெயர் 'நல்லெண்ணமோ'.

கைதிகள் பரிமாற்றமா? நல்லெண்ணப் பரிமாற்றமா? என்பது உலகிற்குப் புரிந்துவிட்டது.

இல்லை பேல் பூனை கண்ணை மூடிக் கொண்டால் பூலோகம் இருண்டு போய்விடுமா? என்ற அனுபவமொழி பொய்த்துவிடுமே!

எனினும் இதில் வெற்றி விடுதலைப் புலிகளுக்கு!

தோல்வி அரசாங்கத்துக்கு-குறிப்பாக அமைச்சர் அத்துலத்துக்கு!!

எனினும் கைதிகள் பரிமாற்றத்தினால் இரு தரப்பிலும் புதிய நம்பிக்கை உணர்வு தோன்றி உள்ளதாகவும்—

இதுமேலும் முன்னேற்றத்துக்கு வழிகோலக் கூடும் என்றும் —

அமைச்சர் அத்துலத் கூறியிருப்பதால் கைதிகள் பரிமாற்றம் தமிழர் உரிமைப் போராட்டத்தில் இது சரித்திரப் பிரசித்தி பெற்ற மிகப் பெரிய திருப்புமுனையாகப் பதிக்கப்படும் என்பதில் சந்தேகமில்லை

**விருப்புகள்**

G.C.E. (O.L) இல் கட்டாய பாடமாகிய கணிதத்தில் ஆரம்ப அறிவில்லாதவர்களுக்கும், சித்திபெய்தாதவர்களுக்கும் ஆரம்ப அறிவிலிருந்து விஷேட சித்திக்குக் கற்பிப்பதில் 18 வருட அனுபவமுள்ள ஆசிரியரினால் வீடுகளிற் சென்று கற்பிக்கப்படும். மற்றும் கலை, விஞ்ஞான, வர்த்தக பாடங்களும் பட்டதாரி ஆசிரியர்களினால் வீடுகளிற் கற்பிக்கப்படும். காலை 8.00 மணிக்குள் வீட்டிற் சந்திக்கவும் அல்லது கடிதத் தொடர்பு செய்யவும். ஆறுமுகநாதன், 10, சச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி.

## பாகிஸ்தான் அமைச்சரவை இராஜினாமா!

ராவல்பிண்டி, டிச. 21

பாகிஸ்தான் அமைச்சரவை உறுப்பினர்கள் கூட்டாக தமது இராஜினாமாக் கடிதங்களை பிரதமர் ஜுனேஜோவிடம் கையளித்தனர்.

கடந்தவாரம் கராச்சியில் இடம்பெற்ற இனக் கலவரங்களில் 160 பேர் கொல்லப்பட்ட விடயம் குறித்து ஆராயப்பட்ட அமைச்சரவைக் கூட்டத்தையடுத்தே இந்தஇராஜினாமாக்கள் சமர்ப்பிக்கப் பட்டன.

அமைச்சரவை இராஜினாமாவுக்கு உட்கட்சிப் பூசலும் ஒரு காரணம்.

பிரதமர் ஜுனேஜோ எதிர்நோக்கும் நெருக்கடிகளை சமாளிப்பதற்கும், அமைச்சரவையை அவர் மாற்றியமைப்பதற்கும் வசதியாகவே இராஜினாமாக்கள் சமர்ப்பிக்கப்பட்டதாக மற்றொரு செய்தி தெரிவித்தது. (உ)

## முஸ்லிம்...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

ஆகியன ஆளும் கட்சியைச் சேர்ந்த சிரேஷ்ட அரசியல்வாதிஒருவருக்கு மனக்கசப்பை ஏற்படுத்தியுள்ளதாம்

அதன் எதிரொலியாக அவர் பதவிவிலகி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியில் சேர்ந்து வழிநடத்த முன்வந்திருப்பதாக கொழும்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (அ எ. 21)

## ஜயந்தி விழா

யாழ்ப்பாணம், டிச. 21

சுவாமி சிவானந்தரின் பிரதம சீடரும் இலங்கை திவ்யஜீவன் சங்க ஸ்தாபகரும் உலக பூரணயோக சமாஜங்களின் தலைவருமான யோகிராஜ் சுவாமி சச்சிதானந்தாவின் 72 ஆவது ஜயந்தி விழா, சிவானந்த சிறுவர் பாடசாலையின் ஆண்டு விழா ஆகியவை நாளை திங்கட்கிழமை காலை 9 மணியளவில் யாழ் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெறும். (உ-எ)

## வல்வெட்டித்.

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

பகுதிகளில் பாதுகாப்பு அரணைச் சிரமைக்கும் வேலையில் சிப்பாய்கள் ஈடுபட முயன்ற வேளையில் --

சென்ரியிலிருந்த புலிகளை நோக்கி தாக்குதல் நிகழ்த்தப்பட்டது

இதையடுத்தே மோதல் ஆரம்பித்ததாகவும், இம் மோதல் சுமார் ஒருமணி நேரம் நீடித்ததாகவும் தெரிய வருகிறது

இதே வேளை வெள்ளி நண்பகல் முகாமை அண்டியுள்ள சில வீடுகளை படையினர் குண்டுவைத்துத் தகர்த்ததாகவும் தெரியவருகிறது.

## சிரட்டைகள், தகரங்களை - -

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

போது வைரஸ் அதிகமாகப் பரவும் ஆபத்து உண்டு.

என்சபிலிடிஸ் நுளம்பு மாலையிலும் இரவிலும் வீட்டுக்கு வெளியிலேயே அதிகமாக மனிதர்களைக் கடிக்கிறது

மாலை 5மணிக்குப்பின்னர் வீட்டுக்குள்ளே இருந்தால் இந்த நுளம்புக் கடியைத் தவிர்த்துக் கொள்ளலாம் மாலை ஐந்து மணிக்கே உங்கள் வீட்டு ஜன்னல்களையும், கதவுகளையும் பூட்டிவிடுங்கள் குறிப்பாக குழந்தைகளை ஐந்து மணிக்குப் பிறகு வீட்டுக்குவெளியே விடாதீர்கள்.

மலத்தியன் தெளிப்பதன்மூலம் இந்த நுளம்பை அழித்துவிட முடியாது

வீடுகளில் மற்றும் இடங்களில் தண்ணீர் தேங்கி நிற்பதைத்தவிர்ப்பதே கியுலக்ஸ் தொல்லையிலிருந்து விடுபட சிறந்த மார்க்கமாகும்.

வடகிழக்குப் பருவப் பெயர்ச்சிக் காலத்திலேபோதுதான் இந்த நுளம்பு உற்பத்தி அதிகரிக்கிறது. நவம்பருக்கும் ஜனவரிக்கும் இடையில் தான் இக்காய்ச்சல் வேகமாகப் பரவுகின்றது. கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களில் மூளைக் காய்ச்சல் அதிவேகமாகப் பரவி வருகிறது

மூளைக் காய்ச்சல் மரணத்தைக் கொண்டுவரக் கூடிய ஆபத்தான நோய். அதனால் பீடிக்கப் பட்டவர்கள் குணமடைந்தாலும் (குறிப்பாக இளம் பிள்ளைகளுக்கு) மூளை வளர்ச்சி குன்றும் ஆபத்தும் உண்டு (அ-எ)

**Horizon Enterprises**

★ சவூதி ★ ஈராக்
★ குவைத் ★ ஓமான்

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்கு செய்து தருவதுடன் பாஸ்போட், பொண்ட் ஆகியனவும் செய்து தரப்படும்.
அத்துடன் எம்மிடம் பாஸ்போட் விண்ணப்பப் படிவமும், சகல நாட்டிற்கான எல்லாவிதமான முத்திரைகளும் விற்பனைக்கு உண்டு.
யாழ் முகவரி:
A. பத்மதாஸ்,
மதுரா வீடியோ கிளப்,
இல. 96, 4ஆம் குறுக்குத் தெரு,
சின்னக்கடை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23549

## பலாலி விமான நிலையத் தளம் விரிவாக்க ஏற்படுத்தப்பட்டுள்ள பகுதி காணிகளுள் குத்தகைக்குப் பயிர்செய்து நட்டமடைந்தோருக்கு நிவாரணம்

## அறிவித்தல்

பலாலி விமானநிலையத்தின் விரிவாக்க ஏற்பாடுகள் 1964 ஆம் ஆண்டு 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டப்படி திருத்தப்பட்ட வாறுன காணி எடுத்தல் சட்டம் 2ம் பிரிவின் 1ஆம் உட்பிரிவின்கீழ் காணி காணி அபிவிருத்தி அமைச்சரின் கட்டளைப்படி, பொதுத்தேவைக்கு அவசியமாகத் தேவைப்படுகின்றதென விளம்பரம் செய்யப்பட்டுள்ளன இவ்வேற்பாடு கட்குட்படுத்தப் பட்டுள்ள காணிகளுட் சில குத்தகைக்கு எடுத்துப் பயிர்செய்த காணிகளாகும். இதில் பயிர் அறுவடை செய்யாமல் இவ்வருட ஆரம்பத்தில் வெளியேறிய குத்தகைக்காரர் கட்கு பயிரழிவு நட்டம் கொடுப்பதற்கான விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்று, அவர்கள் விசாரிக்கப்பட்டனர்

இவ்விசாரணையின் விபரங்கள் பின்வரும் அட்டவணைகள் 1, 2, 2ல் காட்டப்பட்டுள்ளன இதில் காட்டப்பட்டுள்ள தகவல்கள் எதுவும் பிழையானது, பொய்யானது அன்றி முரணுனது எனவும் பயிரழிவு நிவாரணம் இக்குத்தகைக்காரருக்குக் கொடுக்கக் கூடாதென ஆட்சேபம் தெரிவிக்க விரும்பும் எவரும் தங்களது ஆட்சேபனைகளை விபரமாகக் காரணங்காட்டி, எழுத்துமூலம் எதிர் வரும் 86-12-26ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9-00 மணி தொடக்கம் 12 மணிவரை நேரடியாக தெல்லிப்பளை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் என்னிடம் கையளிக்கலாம் என இதனால் அறிவிக்கின்றேன். மேற்குறிப்பிட்டவாறுன ஆட்சேபனைகளை 26.12-86ன் முன்னும், யாழ் செயலகத்தில் அலுவலக நேரத்தில் என்னிடம் நேரடியாகவும் கையளிக்கலாம்,

ச. பொ. பாலசிங்கம்
உதவி அரசாங்க அதிபர் (காணி) யாழ் மாவட்ட செயலாளர் அரசாங்க அதிபருக்காக

அட்டவணை 1 உதவி அரச அதிபர் பிரிவு — தெல்லிப்பளை, கிராமசேவகர் பிரிவு — பலாலி

| விண். இல. | விவசாயம் செய்தவரின் பெயரும் விலாசமும் | காணி உரிமையாளரின் பெயரும் விலாசமும் | காணியின் பெயர் | 1986 ஜன.—பெப். செய்கையில் இருந்த பரப்பளவு |
|---|---|---|---|---|
| 01. | வேலுவிளுபகம், பலாலி மத்தி, வயாவிளான் | வீரவாகு பஞ்சாட்சரம், "சஞ்சீவினி" பலாலி, வயாவிளான், (டாக்டர் வி. பாலகுமார் தமது மாமனுர் டாக்டர் வீரவாகு பஞ்சாட்சரத்திற்குப் பதிலாக வாக்குமூலம் அளித்தார்) | பாராமண்டலை அல்லது தவசிக்காடு | 4 |
| 02. | தெய்வேந்திரம் இராசம்மா, 11ம் கட்டை பலாலி, வயாவிளான். | மேற்படியே | மேற்படியே | 5 |
| 03. | விளுபகர் தவராசா ஞானேஸ்வரி, பலாலி மத்தி, வயாவிளான். | மேற்படியே | மேற்படியே | 4 |
| 04. | செல்லத்துரை தேவராசா, மே/பா சி வீரசிங்கம், அணிஞ்சிலடி, அளவெட்டி வடக்கு, அளவெட்டி. | இளையதம்பி செல்லத்துரை, மே/பா. சி. வீரசிங்கம், அணிஞ்சிலடி, அளவெட்டி வடக்கு, அளவெட்டி. | மண்டுவன்காடு | 8 |
| 05. | சுப்பர் அரியகுட்டி, பலாலி மத்தி - இறந்துவிட்டார். மகள் அ சிவபாதம் மந்துவில் கொடிகாமம் விசாரணைக்குச் சமுகமளித்தார். | அரசாங்க காணி | பாராமண்டலை | 6 |
| 06. | சிதம்பரப்பிள்ளை வல்லிபுரம், பலாலி மத்தி, வயாவிளான். | கயிலாயபிள்ளை நவரத்தினம், கயிலாயபிள்ளை வீதி, பலாலி வயாவிளான். திரு. ந. முருகந்தன் தனது தந்தையார் திரு. க. நவரத்தினத்திற்காக வாக்குமூலம் அளித்துள்ளார். | பெருமிகலட்டி | 8 |
| 07. | வயிரமுத்து இராசாத்தி, பிளேக்கா வீதி, சங்கானை கிழக்கு, சங்கானை. | அரசாங்க காணி | பாராமண்டலை | 8 |
| 08. | சந்தையா பாலசுப்பிரமணியம் இ. சிவப்பிரகாசம் மேல்பார்த்து மகாத்தனை, தெல்லிப்பளை | கயிலாயபிள்ளை நவரத்தினம், கயிலாயபிள்ளை வீதி, பலாலி, வயாவிளான் (ந. முருகந்தன் தனது தந்தை க நவரத்தினத்திற்காக வாக்குமூலம் அளித்துள்ளார்.) | பெருமிகலட்டி | 8 |
| 09. | சின்னக்குட்டி சந்தையா, சி வீரசிங்கம் மேல்பார்த்து அணிஞ்சிலடி, அளவெட்டி வடக்கு, அளவெட்டி. | மேற்படியே | மேற்படியே | 10½ |
| 10. | சிதம்பரப்பிள்ளை இராசதுரை, அம்மன் கோவில் வீதி, பலாலி, வயாவிளான் | மேற்படியே | குடுவைக்கலட்டி | 14 |
| 14. | ஆறுமுகம் ஐயாத்துரை, மூர்த்தி வீதி, தையிட்டி, காங்கேசன்துறை | சரவணமுத்து நவரத்தினம் "சூளானை", சுன்னுகம். | வல்லிவிராலை | 12½ |
| 15. | விளுயகர் சின்னத்தம்பி, பலாலி மத்தி, வயாவிளான். | வீரவாகு பஞ்சாட்சரம், "சஞ்சீவினி" பலாலி, வயாவிளான். (டாக்டர் வி. பாலகுமார் தமது மாமனுர் டாக்டர். வீரவாகு பஞ்சாட்சரத்திற்குப் பதிலாக வாக்குமூலம் அளித்தார். | பாராமண்டலை அல்லது தவசிக்காடு | 4 |
| 16. | விளுயகர் இரத்தினம், பலாலி மத்தி, வயாவிளான். | மேற்படியே | மேற்படியே | 8 |
| 17. | இராமலிங்கம் ஐயாத்துரை, பலாலி மத்தி, வயாவிளான். | மேற்படியே | மேற்படியே | 6 |
| 18. | கந்தன் முத்தன், மே/பா. க. மகாலிங்கம், சிறுவர் சீர்திருத்தப் பாடசாலை, அச்சுவேலி. | அரசாங்கக் காணி | பாராமண்டலை | 11 |
| 20. | காசிப்பிள்ளை பாலசுப்பிரமணியம், பிள்ளையார் கோவிலடி, பலாலி, மத்தி, வயாவிளான். | கயிலாயபிள்ளை நவரத்தினம், கயிலாயபிள்ளை வீதி, பலாலி மத்தி, வயாவிளான். (திரு. ந முருகந்தன் தனது தந்தை க. நவரத்தினத்திற்காக வாக்குமூலம் அளித்துள்ளார்) | குடுகட்டுவைக்கலட்டி | 7 |
| 21. | வயிரமுத்து சுப்பிரமணியம், ஐயர் விட்டடி, பலாலி, வயாவிளான், (இவர் மனைவி சு. பேபி விசாரணையின்போது சமூகமளித்தார்) | அரசாங்க காணி | பாராமண்டலை | 4 |
| 22. | திருமதி. சின்னத்துரை மணி, பலாலி மத்தி, வயாவிளான். | மேற்படியே | மேற்படியே | 7 |
| 23. | அரியகுட்டி சிவராசா, பலாலி மத்தி, வயாவிளான். | மேற்படியே | மேற்படியே | 7 |
| 24. | அரியகுட்டி சிவபாதம், பலாலி மத்தி, வயாவிளான். (தற்சமயம் சி. பூபாலசிங்கம் மேல்பார்த்து 1ம் கட்டை, மந்துவில், கொடிகாமம்) | மேற்படியே | மேற்படியே | 14 |

(அட்டவணை 2,3,4 தொடரும்)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சாரநிலைய வீதி. இரண்டாம் ஒழுங்கை 15-ம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி 21-12-1986 தொலைபேசி இல. 24805, 22073
Printed and Published by Uthayan Publications (Private) Ltd., 15, Second Lane, Power House Road, JAFFNA. Registered as a Newspaper at the General Post Office. Sri Lanka. Under Nnmber Q.J.60, N. 26. Telephone Number 24805, 22073.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org